

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், காசநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நோயாளிகளை அவர்கள் வீட்டிலேயே சென்று கவனிக்க ஏதுவாக ஆறு களப்பணியாளர்களுக்கு இருசக்கர வாகனங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (01.08.2016) வழங்கினார்.

செ.வெ.எண். 489/2015 நாள்: 01/08/2016

## காசநோய் தடுப்பு களப்பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனங்களை வழங்கினார் மாவட்ட ஆட்சியர்

இந்தியாவில் ஆண்டுதோறும் 20லட்சம் மக்கள் காசநோயினால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோயினால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3 லட்சம் இந்தியர்கள் இறந்து போகிறார்கள். இந்நோய் நடுத்தர வயதினரையே அதிகமாக தாக்குகிறது.

1997-ம் ஆண்டு முதல் இந்திய அரசாங்கம் திருத்தியமைக்கப்ட்ட தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தை (RNTCP) அமல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சளிப்பரிசோதனை X ray, CBNAAT மற்றும் ஆறு மாத சிகிச்சைக்கான மருந்து மாத்திரைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது. சிகிச்சையும் சுகாதார பணியாளரின் நேரடி கண்காணிப்பில் தினந்தோறும் நடைபெறுகிறது.

குமரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 1500 நபர்கள் காசநோய் சிகிச்சை பெற்று பயன்அடைகின்றனர்.

எனவே காசநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சிகிச்சசையை துரித்தப்படுத்தவும் நோயாளிகளை அவர்கள் விட்டிலேயே சென்று கவனிக்கவும் ஏதுவாக 06 களப்பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனங்களை மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன் சிங்.ரா.சவான் இ.ஆ.ப அவர்கள் இன்று (01.08.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மரு.பி.ராஜையன், இணை இயக்குனர் நலப்பணிகள் மற்றும் மரு.வே.பெ.துரை, துணை இயக்குனர் மருத்துவபணிகள் (காசநோய்) ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

DEPUTY DIRECTOR OF MEDICAL SERVICES (TB)
DISTRICT TB CENTRE
ASARIPALLAM, KANNIYAKUMARI DISTRICT